
"ஆத்ம ஸாந்தியும்"!
"ஜுபாயும்"!!
2009 ஜனவரி 1
வியாழன்! மார்கழி 17
இதழ் - 1
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# "ஆத்ம ஸாந்தியும்!"

# "ஜபாயும்!!"

2009 ஜனவரி 1 தேதி.

வியாழன்! மார்கழி 17


## இதழ் - 1

# பொருளடக்கம்

1. ஆத்ம ஸாந்தியும், ஜனாபாயும்

ஆத்ம ஸாந்தி------------------------------------------------1

எல்லாம் நீ!



## சத்தியவாக்கு (1)

சத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.
அடங்கு! அடங்காதே!
அன்பாய் இரு.
அறிவை உணர்.


"சத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

சத்குரு திருவடி துணை! நம்பினோர் கெடுவதில்லை!
தெய்வம் மனுஷ்யாணாம்! யத்பாவம் தத்பவதி!
ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம், ஓம்!
அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!
ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!

**(1) தூய மன** முயற்சியினால், பிரம்மாப்யாசம் செய்பவருக்கே, அரிய **பர உணர்வு** எளிதாய் எய்தும் :-

எம் குழந்தைகளே! இந்த அறிவு ஊன்றி சிந்திக்க வேண்டும். மனம் என்றுவே எண்ணம். எண்ணம் என்றுவே கற்பனை. கற்பனை என்றுவே நாம ரூப குண சம்பந்தம் கொண்டதாகும். இந்த நாம ரூப குண சம்பந்த எண்ணமற்று இருப்பதே தனது மனமுயற்சி என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.


உ



இந்த நாமரூபம் தோற்றும் வரை
மன எண்ணம் இருந்தே தீரும். இந்த
நாமரூபங்களை **மண்ணாக** உணரும்
நிலை பெற்று வொழிய மன எண்ணம்
மறையாது. அப்படி மண்ணாக உணரும்
நிலை அவ்வளவு எளிதல்ல. அதனால் ஆரம்
பத்திலேயே மண்ணாக பார்க்கும் நிலையை
விட்டு விட்டு, அந்த நாமரூபங்கள் மீது

**உரிமை & உடைமை!**


கொண்டாடுவதை முதலில் குறைக்கவாம்.
நிறுத்தவாம். அப்படியானால் மாற்றான்
(ஸ்ரீபதவாக்)
பொருளை **எனது!** என உடைமை கொண்
டாடுவதும், ஆதிக்கம் & அதிகாரம்! செய்வ
தையும், முதலில் குறைக்கவாம். பின் நிறுத்தவாம்.



எனது என உரிமை! உடைமை! ஆதிக்கம்!
அதிகாரம்! செலுத்தாமல் இருப்பது
என்றால்; அந்த நாம ரூபம் பெரு
மையதோ! அவரிடம் எல்லாம் நீயே!
என சர்வார்ப்பணமாக விடுவதே முறையாகும்.
இங்கு எல்லாம் நீயே! என வாயளவில் அதாவது
வாக்கினால் மட்டும் சொன்னால் போதாது.

அந்த நாமரூபபொருள் வருவதிலும்! போவதிலும்!
" " " எடுப்பதிலும்! கொடுப்பதிலும்!
" " " அந்த விவகாரத்திலும்


மயங்காமல்! தயங்காமல்! சந்தேக கலக்கமும்
இல்லாமல்! தீய தோஷ கற்பனை பண்ணாமல்!
போக்கும் வரவும்! பற்று வரவு என்ற கொடுக்கல்
வாங்கலும்! ஒழுங்காக விகிதாச்சாரப்படி
நடைபெறுகிறதென்று நீ உணர்வு வேண்டும்.



இந்த திட உணர்வு இருந்தால் கண்டிப்பாக
நாம ரூப குண தோஷ சம்பந்தம் கெடும்
நாம ரூபம் கெட்டாலே எல்லாம் **மண்ணே!**
என்ற திட உணர்வைப் பெறலாம். இந்த திட
உணர்வை பெறுவதே தனது மன முயற்சியாகும்.
இம்மன முயற்சியின் முடிவு எல்லாம் பரமாகிய
மண்ணே! மண்ணாகிய பரமே! அங்கு இயல்பாக
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே என முடியும்.

---

**உ கர்மமனம்!** மனதுடையோர்
அந்த **பர!** சிவத்தின் கருணையில்லாகுறைத்
தால் வேறு வேறாய் காண்கின்றனர்:—
எம் செல்வங்களே:— கர்மமனம் என்றதைச்
சொல்கிறீர் என்றால்? **பரத்தை!** சுட்டி
உணர்த்தாமல்; நாம ரூப **ஜகத்தை!**
ஸத்தியமாக காண்பிப்பதே கர்மமனம் ஆகும்.




(A) நாமரூபம் இல்லாமல் தோற்றமாத்திரமாய் இருப்பது பரமாகியமண் ஆகும்.

(B) அதே நிலையில் நாமரூபம் இல்லாமல் தோற்ற மாத்திரமாக இருப்பது பரஅம்ஸமாகிய பொன் ஆகும். இப்போது இந்த பொன்னானது நாமரூபத்தை உண்டாக்குத்தக்கதொரு **பொருள்!** ஆகி விட்டது (இது ஈசன் என்ற ஸ்ரீ பகவான் ஆகும்)

(C) அதே பரஅம்ஸமானது நாமரூபம் என்ற நிலையில் **ஆவரணம்!** என ஆகி விட்டதும். இங்கு ஆவரணம் என ஆக்கியது மாயா **மனம்!** ஆகும். இங்கு மாயா மனமும் அதன் தோஷ குணமும் இணைந்த நிலையில் நான் ஓர் பந்த **ஜீவன்!** என தன்னைத் தானே ஆக்கிக் கொண்டதும்.


(இது ஜீவ நிலை!)



6

இங்கு மனதால்தான் ஜீவன் என ஆனானே தவிர மனமில்லையானால் ஜீவன் என ஆக மாட்டான் என்பதே ஸத்தியம்.

இங்கு நாமரூப குண சம்பந்தத்தால் ஜீவன் என ஆனவன் நாமரூப குண சம்பந்தத்தை **நான்!** இல்லையென விட்டுவிட்டால் மறுகணம் **அறிவாகிய!** (ஆத்மா!) ஸ்ரீபகவானாகவே இருக்க முடியும். அறிவாகிய ஸ்ரீ பகவான் நாம் என ஆகிவிட்டால் மறுகணம் பேரறிவாகிய **பரமே நாம்!** என்ற நிலை பயிற்சி முயற்சி இல்லாமலேயே பெற முடியும். இங்கே பரசிவம் என்ற ஸ்ரீபகவான் கருணையை ஏன் பெற வேண்டும் என சொல்கிறார் என்றால்? **வினை** கணக்கு முடியாமல் ஜீவ போர்வை என்னும் **திரை!** அகலாது. ஜீவ போர்வை என்னும் திரை அகலாமல் நாம் ஆத்மா என்னும் அது ஆக முடியாது.




விளையால்! தொடர்ந்த ஜீவ போர்வையின்
திரை! அகல அந்த மாயாவை! உடைய
ஸ்ரீ பகவான் கருணை அவஸியம் வேண்டும்.

---

3 வருத்தம் இல்லாது இருக்கையிலும்;
வருத்தம் போல வழிவுற்ற மாயாவி!
மனதில்! தோன்றும்:—

அறிவான குழந்தைகளே:— ஆத்ம சாதனைக்கு
எந்த வருத்தமும்! எந்த கஷ்டமும்! எந்த
சிரமமும்! எந்த சஞ்சலங்களும்! எந்த
கடின சாதனையும்! எந்த கடின பயிற்சியும்
இல்லை! யென்றும்; தேவை இல்லை!
என்றும்; பிரமாணமாக சொல்லுவோம்.
ஸ்ரீ அனுபவ ஸ்ரீமஹான்களின் ஸத்திய
வாக்கும் இருக்கிறது என்பதே ஸத்தியமாகும்.




8

எப்படி என்றால்? இந்த மனமும்! கலி புருஷனின்
தோஷ குணமும்! இணைந்த தன்மையில் இம்மனதை
**மஹாபாபி!** மனம் என்கிறோம். இதன்
உண்மையானது:— மனம் என்றால் **எண்ணம்**
சம்பந்தம் கொண்டதாகும். கலி புருஷனின் தோஷ
குணமானது **ரத்தத்தில்!** கலந்த ஒன்றாகும்.

மனம்:— அஹங்கார! அதிகார! ஆதிக்க! அபிமான
சம்பந்த **உடைமை & உரிமை!**
சம்பந்த எண்ண வடிவம் ஆகும்.

கலி தோஷம்:— காமம்! குரோதம்! மோஹம்! துரோக
விரோதம்! வஞ்சகம்! இச்சை! பொய்! சந்தேகம்!
கவகீகம்! பயம்! ஆகிய இந்த பத்து தோஷ
குணங்களையும் ரத்தத்தில் கலந்த ஒன்றாகும்.

மனம் = அண்ணன்! கலி தோஷம் = தம்பி! ஆக இவ்
விருவரும் இணைந்தால் இம்மனம் மஹாபாபி என்ற
நாமம் பெற்று விட்டதும் சர்வார்ப்பணம் செய்வதில்
எந்த வருத்தமும் இல்லை. ஆதலால் மேலே சொன்ன விளக்
கத்தால் சர்வார்ப்பணம் செய்ய தடுமாற்றம் ஆகிறது.



(9)

(4)

# வாய் ஞானம் வேண்டாம். அனுபவ ஞானம் வேண்டும்.

(A) வாய் ஞானம் :- அரைகுறை உணர்வு இல்லாதது.

உதட்டளவில் இருப்பது உள்ளத்தில் இல்லாதது

(B) நிறைய நூல்களை கற்பது. வெகு விரிவாக கற்பது.

அத்வைத எல்லா நூல்களையும் கற்பது. உள் ஆழ்தல் இல்லாமை

(C) பிறர் கவனமும், அதனைப் போதிப்பதும் தற்கவனம் இல்லாதது.

பிறரிடம் குறை கண்டு கொண்டிருப்பது தன் சக்தியை வீணாக்குதல்

(D) பாடம் பட்டம் பதவி போட்டி பொறாமை/வியாபாரமும். விளம்பரமும்.


கௌரவம் அந்தஸ்தை நாடுவது. தற்புகழ்ச்சி ஆடம்பரம்.

(E) கர்ம காண்டத்தில் நாட்டம். பிரவர்த்தியில் ஞானம் தேடுதல்.

சரியை தெய்வ வழிபாட்டில் ஞானம் அடைய முயற்சிப்பது

பரிகார முறையில் ஞானம் தேடுதல்.

இவை வாய் ஞானம் ஆகும்.



10

(A) அனுபவ ஞானம்:— ஸர்வார்ப்பணம்! இறை & குருவிடம் பரிபூரணமாக இருக்கணும்.

(B) சுருங்க! கற்பது. ஒன்றில்! நிலைப்பது.

(C) முன்கவனமும்! தற்காப்பும்! இல்லாமல், தற்கவனமாக! இருப்பது.

(D) பேதம்! காணாமல் இருப்பதும்; அதனால் வரும் விருப்பு & வெறுப்பு! இல்லாமல் இருப்பதும்; அந்த விருப்பு வெறுப்பால் குற்றம் குறை! கண்டிப்பு & தண்டிப்பு! இல்லாதிருக்கவேணும்.

(E) ஸத்திய தர்மத்தில்! நிலைபெறுவதும்; பிரம்மார்ப்பணம்! தைலதாரை போல் ஸமர்ப்பணையில் இருப்பதும்; அனுபவ! ஞானமாகவும்.



(11)

தூங்காமல் தூங்கும் நிலை:—

நாம ரூப ஜக ஜீவ தோற்றத்தில் மனம் மயங்கி அனுபவிப்பது அறியாமையின் உறக்கம் ஆகும்.

தொடரும்.

(5)

தூங்காமல் தூங்கும் நிலை.

இதை ஹரி துயில் என்பர் அனுபவ ஸ்ரீமஹான்கள்.

அதாவது அரிவோடு ஒன்றுதலாகும்.

அறிவு என்றால் ஓர் நிலையின் ஆன்மா என்றும் பொருள் படும். மற்றும் ஓர் நிலையில் ஸ்ரீ பகவான் ஈசன் என்றும் பொருள் படும்.

இந்த அறிவானது ஆன்ம நிலையில் எந்த கலப்பும் இணைப்பும் இல்லாத சுத்த ஸ்வயம் ஆனதாகும்.

இந்த அறிவானது ஸ்ரீ பகவான் நிலையில் மாயா சம்பந்தம் கொண்டு இயங்கும் நிலை பெறுகிறது.

ஆகவே ஓர் ஆன்ம சாதகன் ஸ்ரீ பகவானை தன்னுள் அடக்கி மாயாவும் இயக்கம் அற்ற நிலையில்: ஆன்மாவே நானாக இருக்க வேண்டும்.



ஆனந்தமே ஆத்ம திருப்தி / தூங்காமல் தூங்குவது பரமானந்தம்

நாமரூப ஜக ஜீவ தோற்றத்தில் (12)

மனம் மயங்காமல் இருப்பது

ஒன்றே! நடப்பது நடவமே!

எனும் சாந்தியின் அமைதி

பெற்று அடங்கி உணர்வுடன் கூடி இருப்பது தூங்காமல் தூங்குவது

ஏன் ஸ்ரீபகவான் தன்னுள் அடக்க வேண்டும் என்று சொல்கிறோம் என்றால்? இச்சாதகனின் பாவம்

புண்ணிய & பாப / கர்மா /

சம்பந்தம் கொண்டதாலே. ஆகவே அந்த ஸ்ரீபகவான் நாம் என ஆக்கிக் கொண்டால்

இயக்க! மாயாவும்! கர்மாவின்!


மனமும்! இவ்வாறு அறிய வாய்ப்பு உண்டு.

மாயாவும் மனமும்! நாம் அல்ல! நம்முடையதும் அல்ல என்று உணர்வதே ஸ்ரீபகவான்!

ஆத்மா! வாக ஆக்கி அவ்வாத்மாவே நாம் என ஆக்கி ஒன்றிக் கலந்தே வேறின்மையில் ஆகும்.

அதுவே தூங்காமல் தூங்கும் நிலை ஆகும்.

மெஞ்ஜயம்! எது என்றால்? மனதை அறிவாக்கி! அவ்வறிவை



**பேரறிவு** | ஆத்மதை மறை ஐயம் என்ற
மறை நாசம் ஆகும்.
இதன் சாதனை.

(A) **நாமரூப** | கற்பனை பண்ணிடல் மனம் ஆகும்.

(B) ,, கற்பனையின் குணம் எழுந்தால் மனம் ஆகும்.

(C) ,, கற்பனையில் நான் / எனது புகுந்தால் மனம் ஆகும்.


(D) ,, பேதம் / விருப்பு வெறுப்பு / குற்றம் குறை / தோன்றினால் மனம் ஆகும்.

(E) ,, சொந்தம் / பந்தம் / பாசம் / பற்று / இவைகளில் அமைந்தால் மனம் ஆகும்.

**அறிவு** | ஆகும் நிலை

(A) ,, அநித்ய தோற்றமும் / இருப்பும் /
இயக்கமும் / ஸ்ரீ பகவானுடையது /

**ஜீவன்** | உடையதாக எண்ணுவது மனமாகும்
அறிவாகும் அறியாமை.



B) **பேரறிவு!** ஆகும் நிலை.

நாமரூப ஜக ஜீவ என்ற **தோற்றமும்!**

**மண்ணாகிய!** பரமே! **பரமாகிய!**

மண்ணே! அதுவே நாமம்! நாமே அது! என சந்தேக கலக்க பயம் இல்லாமல் உணர்வதே பேரறிவாகும்.


இங்கு மனம்! புத்தி! சித்தம்! என போனால் அது

மனோமய **பிராந்தி!** மயக்கம் ஆகும்.

இங்கு மனம்! அறிவு! பேரறிவு! என போனால் அது

**மனோஜயம்!** ஆகும் நிலையாகும்.

7) **கரையற்ற! நிறைவுற்ற!**
**மறைவற்ற! குறைவற்ற!**



# அகண்ட பிரம்மம்! ஒன்றே உண்மை!

(A) காண்பதும் இல்லை! கேட்பதும் இல்லை!!

(B) நினைப்பதுவும் இல்லை! நினையாததும் இல்லை!

(C) மற்றதெல்லாம் ஒருகாலும் இல்லை!

(D) தோற்றமே சிக்கல் இல்லாமல் அதுவே நாம்! உறுதியாகச் செய்.

இதில் முக்கியமான ஒன்றை உணரவும்.


**நாமரூப! ஜக! ஜீவ!** தோற்றங்கள்

**கண்கள்!** காண்கின்றன! ஆனால் கேட்பதில்லை. பேசுவதில்லை.

**காதுகள்!** கேட்கின்றன! ஆனால் பார்ப்பதும் இல்லை! பேசுவதும் இல்லை!


**வாய்!** பேசுகிறது! ஆனால் காண்பதும்! கேட்பதும் இல்லை!

16



இதில் ஓர் ரகசிய முக்கியம் என்னவென்றால்?

**கண்ணால்!** கண்டதையும்! **காதால்!** கேட்டதையும் அப்படியே உண்மையென **வாய்!** பேசிவிடுகிறது. இதை உணர் **வாய்தான்!** காணவும்! கேட்கவும்! இல்லையே பின் எப்படி கண்டபாவனையிலும்! கேட்டபாவனையிலும்! இந்தவாயானது எப்படி **நீதி!** வழங்கமுடியும்? எப்படி நீதி வழங்கக் கூடும்? இதுவாய்க்கு தேவை இல்லாத பிரச்சினைதானே? எதிராளியின் மனமும்! வினையும்! எப்படி இருக்கிறது என்று வாய் அறிய முடியாதல்லவா? இப்படி முன்பின் தெரிய முடியாத ஒன்றை வாயால் விளக்கம் பெறுவது பெருந்தவறுமாகும். இத்தவறு மாத்திரமல்ல. பெரும் பிரச்சினையை இந்த **வாய்** தான் உண்டாக்கி விடுகிறதென்று உணருங்கள்.




இவ்வாத பிரச்சினையை உருவாக்குவதால் **விஞ்ஞானே!** பெருமை! **ஜன்மா!** தானே தொடரும். இது தேவையா? ஆகவே நாம் இங்கு சென்று அடங்கி **இறைகுரு!** வுக்குள் புகுந்து சென்று அமைதிகளுக்கால் காண்பதிலும்! கேட்பதிலும்! உன்னை உண்மையை உணர முடியும். ஆகவே இங்கு சர்வார்ப்பணம் **மண!** சிக்கல் தீர்க்கிறது. பின் பிரம்மார்ப்பணம் **மனதை!** இவ்வாமல் செய்துவிடுகிறது

இங்குதான் கறையற்ற! நிறைவற்ற! மறைவற்ற! குறைவற்ற! **பிரம்மமே!** சத்தியம்! அது வேதாம! என்ற நிக்கல் அந்த அனுபவம் பெற முடியும்.

x —— x —— x —— x —— x —— x

8 யாம் பிரம்மம்! யாம் பிரம்மம்! யாமே எல்லாம்! என்ற **பர** பாவனையால். இந்த தர்மக்காவில் நிலையில் வாமல் ஒடும்மனம் நிலை பெற்று நிற்கும்.




18

இவ்வரிகளை ஓர் உள் உணர்வால் உணர்க.

(A) **நாமரூப** ஜக சொருபமானது வெளிக்க நிலையில் **மனதின்** ஆளுகைக்குள் அகப்பட்ட **விஷ்ணு மாயா** சம்பந்தம் கொண்டதாகும்.

(B) நாமரூப ஜக **ஜீவ** சொருப **சிருஷ்டி**யானது **ஈசனின்** கை கருவியாகிய **யோகமாயா** சம்பந்தம் கொண்டதாகும்.

(C) **தோற்றம்** மாசிசுமமான **நாமம்** மட்டுமான ரூபம் அற்றதானது அதாவது குணை இயக்கம் அற்றதான அனந்த அண்டங்கள். கோடானு கோடி சூரிய சந்திராதிகள் அனைத்தும் மகேசனுடைய **யோகமாயா** சம்பந்தம் கொண்டதாகும்.



Ⓐ விஷ்ணுமாயாவின் **அந்த** சக்தி, யோகமாயாவாகும்.

Ⓑ யோகமாயாவின் ,, ,, யோகமாயாவாகும்.


Ⓒ யோகமாயாவின் **அந்தமானதும்!**

,, பிறப்பிடமானது மனதே!

**காலாதீதபரம்** ஆகும் என உணர வேண்டும்.

Ⓐ ஆரம்ப சாதனையாளன் விஷ்ணுமாயாவிலிருந்தே மாயா மனதிலிருந்தே தம் **ஜீவன் முக்தி** பயணத்தை தொடங்குகிறான்.

Ⓑ அப்படி பயணம் தொடங்கியவன் சர்வார்ப்பண நிலையில் யோகமாயாவின் அதிபதியான **ஈசன்!** சொரூபத்தை அடைகிறான். ஈசன் சொரூபத்தை அடைபவன் ஈசனின் மாயாவையும் நோக்க மாட்டான். மாயாமனதையும் நோக்க மாட்டான். இது உறுதி.



இப்போது அவன் நிலையாகிய சாட்சி பாவனையிலி

ருந்து சர்வசாட்சி பாவனையை எட்டுகிறான்.

அதாவது

↑ கண்ட பாவனையிலிருந்து அகண்ட பாவனையாக அனுபவம் பெறுகிறான்.

உ இந்த அகண்ட பாவனையின் நிலையே ஓர்

திடஞானியின் இருப்பிடமும்

யதார்த்தகாரணமும் சொரூப வசதனையும் ஆகும்.

இது ↑ கண்ட பாவனையை தாண்டும் போது ஸ்ரீ சத்குருவால்

பிரம்மார்ப்பண பாவனை நிலையில் இது அகண்

டாண்ம பாவனையாக நிறைவு பெறுகிறது.


இதுவே ஜீவன் முக்தி ஆகும் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

இது வரிசைக் கிரமமாக நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

ஆனால் இப்பாடலில் சொல்வது ஆரம்ப நிலையிலேயே

அகண்டாண்ம பாவனையை செய் என்றும் ~~அதனால்~~

அலிபாயும் மனமானது அடங்கி அடங்கி அறியும் என்கிறார்.




ஓர் மறைந்தான உண்மை நிலை என்னவென்றால்?

**லோகமாயா!** சம்பந்தம் கொண்ட, ஈசன் நிலையில், சர்வாரியணத்திற்கே! அளவற்ற வல்லமை இருக்குமானால்.

**யோகமாயா!** சம்பந்தம் கொண்ட **பரா!** நிலையில், பிரம்மாண்ட பாவனையாகிய **அகண்ட பரா!** பாவனைக்கு, எந்தவித வல்லமை இருக்கக் கூடும் என்று, உணர வேண்டும்.

முன் சொன்ன நிலையில், ஓர் சாதகனுக்கு (1) பூர்வ புண்ணிய தர்மம்! (2) முன்ஜென்மாவின் சர்வாரியணம் ஆர்த்திகுரு நிஷ்டையும்! (3) சித்தையின் நம்பிக்கையின் வைராக்கியமும் **இருந்தாலும்!** அகண்டாண்ட பாவனை சாத்தியமாகும்.

முன் மூன்று இல்லாமலும் **திட நம்பிக்கை**யில், திட **வைராக்கியம்!** இருந்தாலும் சாத்தியமாகும். என்று மகான்கள் சொல்வர்.



(21) (B)


இதன் **ரகஸ்யம்** என்ன வென்றால்?

(1) இச் **சாதகனுக்கு** பூர்வ புண்ணியம் தர்மமாக மாறியிருக்கணும்.

(2) முன் ஜன்மாவிலேயே சர்வார்ப்பணம் செய்து ஏ.சன்றிலி பூர்த்தியாகி இருக்கணும்.

(3) **சிரத்தை**யின் **நம்பிக்கை**யின் **வைராக்கியம்** உறுதியுடன் இருக்கணும்.

இம்மூன்றும் நிறைந்தவன் எவனோ? அவன் சர்வார்ப்பணம் பண்ணத் தேவை இல்லை. அவன் அகம் பிரம்மம், பிரம்மம் அகம், அகமே எல்லாம்; ஜகம், பரமும், ஜீவர்களும் சிறிதும் இல்லை என்ற **பிரம்ம அகண்டாணம** பாவனை செய்தால் போதும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.




9 டி ஞானியை தரிசித்தால் அறம்!

மேலோங்கும் அறம்! அழியும்

(A) அறம் மேலோங்கும் — இது ஓர் பக்குவ ஆத்மாவுக்கே சாத்தியமாகுமே யல்லாது அபக்குவ ஆத்மாவுக்கு சாத்தியமாகாது என்பதே உண்மையாகும்.

பூர்வ புண்ணியம் தர்மமாக மாறி இருக்க வேண்டும். இச்ஜன்மாவில் ஏக்கம் உருக்கம் கண்ணீர் பெருக்கம் உடையவனாக இருக்க வேண்டும்.

(B) இறை குரு! உணர்வு ஸ்திரமாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஓர் பக்குவ ஆத்மாவுக்கு அறம் மேலோங்கும் என்றால் முக்தியின் வழி! திறக்கும். அறியாமையின்! அதாவது அவன் கவனக்குறைவின் விலங்குகள்! பொடிப் பொடியாகித் தடைகள் தானே நீங்கும். (இதையே அறம் அழியும் என்றோர்.)




**ஞானியோருக்கு** / **மணம் கமழ** கண்டு அவசியம் பலன் பெறுவர். அந்தஞான ஞானியை தரிசித்தவர் எவராயினும் அவர் **பலன்** / பெறாமல் போகார்.

---

**10** மனதை விட்டு **விகல்பம்** (குற்றம் குறைகள்) நீங்கி விட்டால் பிறகு தீர்ந்தவுடன் அக்கினி எப்படி **தணிதலை** / எப்படி சாந்தி ஆகுமோ அப்படி உண்மனதை விட்டு இயல்பாகவே நாமரூப ஜகம் விலகி விடும்.

குற்றம் குறை என்றால், குற்றம் செயல் ஆகும். குறை வாக்கு ஆகும். இக்குற்றம் குறை தோன்ற காரணம் விருப்பு & வெறுப்பு ராகத்துவேஷாதிகள் ஆகும் என அறிவு கூர்ந்து உணர்ந்தால் புரியும்.



இந்த விருப்பும் வெறுப்பும் ஒழிய வேண்டுமானால்

பேதம்! அழிபடவேண்டும். இப்பேதங்கள்

நாமரூப! தோற்றத்தால் உண்டாகிறது.

இந்த அனித்ய நாமரூப தோற்றங்களையும்

உடைமை & உரிமை!


பாராட்டினால் பேதமும், பேதத்தால் விருப்பு வெறுப்பும், விருப்பு வெறுப்பால் குற்றம் குறையும், அக்குற்றம் குறை பாராட்டுவதால் புண்ணிய பாபமும், ஜனன மரணமும் உண்டாவது இயல்பாகிவிடுகிறது.

இந்த அனித்ய நாமரூப தோற்றங்களையும்

ஒன்று அவனுடையதாக! கண்டால்! எல்லாம் சர்வநாசமாகவும்.

மற்றொன்று அகண்! மண் அம்சமாகவும்

உணர்ந்தால்! எல்லாம் சர்வநாசமாகவும்.



முதலில் சூரிய நிலையில் கண்டால்

மனம்! சாந்தியாகும் அதாவது உலரும்.

இரண்டாவது சூரிய நிலையில் உணர்ந்தால்,

மனம்! அழிந்து நாசமாகும் அதாவது எரிந்து சாம்பலாகும்

சர்வார்ப்பணத்தால் உலராமலும், பிரம்மார்ப்பணத்தால் எரிக்க முடியாது.

இதன் பொதுவான! முழுமையான! கருத்து யாதெனில்

ஸங்கல்ப, விகல்பமே!

கல் (குற்றம் குறை கற்பனையே) நரகம் என்னும் ஜனன மரணம்.

ஸம்ஸாரமே! (எண்ணமற்று இருத்தலே)


(மோக்ஷம் என்னும் ஜீவன் முக்தியாகும்)

மோக்ஷம்!

நாமரூப ஜகஜ்ஜீவ (குண) தோற்றமே விறகு! ஆகும்.

சர்வார்ப்பணமும் பிரம்மார்ப்பணமும் அக்கினி! ஆகும். நாமரூப ஜகத்தின் தோற்றம் குறை நீங்கிவிட்டால் அதுவே ஜீவன்முக்தி ஆகும்.





**(11)**

(A) லௌகீகத்திற்கு புண்ணிய பாவம் உண்டு.

(B) வைதீகத்திற்கு சத்திய தர்மம் உண்டு.

(இ) பரமார்த்திகத்திற்கு **எதுவும்** இல்லை.

பரமார்த்திகத்திற்கு எதுவும் இல்லை என ஏன் சொல்கிறார்கள் என்றால்?

(1) அது இயக்கம் இல்லாதது! ஆனால் இயக்கத்தின் ஆதாரம்!

(2) அது தோற்றம் இல்லாதது! ஆனால் தோற்றத்தின் ஆதாரம்!


(3) அது விளக்க முடியாதது! ஆனால் விளக்கத்தின் ஆதாரம்!

(4) அது வாக்குக்கு எட்டாதது! ஆனால் வாக்குக்கு ஆதாரம்!

(5) அது வரிவிளக்கம் இல்லாதது! ஆனால் வரிவிளக்க ஆதாரம்!

(6) அது பஞ்சகர்த்தாக்களுக்கும் விளக்க இயலாத ஒன்று! ஆனால் பஞ்சகர்த்தாக்களின் ஆதாரம்! இப்படியே **நிறைய** விளக்கம் கொடுக்கலாம். ஆனால் அவ்விளக்கம் அனைத்தும் விரயமே! **(வீணே)**

அதை சொல்லுக்கு அடங்காதான்! சொல் இறந்து நின்றவன்! பேச்சு ஒழிவனை சந்தியும் பேசாத பிரம்மமடி என்றார்கள்.





முன்பு கூறிய **A** யும் **B** யும் / முறையே புண்ணிய பாபம் எனச் சொல்லும் **ஜனன மரணம்** என்னும் சுத்த நியதியென்னும் ஆகவே அது அங்கே செல்லாது என்னும் கூறியவர்கள், பக்திய தர்மம் என்றால் அது தெய்வீகம் என்னும் அது **புத்** முக்தியே யன்றி **பர** முக்தியல்லவென்னும், அதுவும் அங்கே செல்லாது என்னும்; ஆனால் அந்த ஒன்று **போக்கு வரவு** அற்றதென்னும், அது **அகண்டானந்த பேரானந்** என்னும் ஸ்ரீ அனுபவ மஹான்களின் வாக்காக இருப்பதால், லௌகீக புண்ணிய பாபத்தையும் விட்டு, தெய்வீக பக்திய தர்மத்தையும் விட்டு, **பட்ட** கட்டை போலும், **சுத்த** கல்லைப் போலும், அதுவே நாம் / நாமே அது என **சும்மா, சுகமா** இருப்பதுவே அனுபவமாகும்.




சர்வார்ப்பணம் ஒன்றே 28 சித்த சுத்திக்கு வழி வகுத்து கொடுக்கும். சர்வார்ப்பணமானது மாயாவை வேரு! அழிக்கச் செய்யும்.

12 மனதை! செயல் இழக்கச் செய்யும்.

வேத சாஸ்திரம்! புராண இதிகாசம்! மற்றும் ஆன்மீகம் எல்லாம்! சித்தசுத்திக்கு தான் வலியுறுத்துகிறதே யன்றி வேறொன்றுமில்லை.

நம் முன்னோர் சொன்ன தெய்வாம் தெய்வ! பூஜை! புனஸ்காரம்! அபிஷேக! ஆராதனை! இவைகளை அங்க! சக்தியுடன் செய்ய வேண்டும். என்றார்கள். இந்த அங்க சக்தியால் சித்த! சுத்தி உண்டாகும். சித்த சுத்தி என்பது பொதுவாக கருவி கரணம்! ஒழுக்கம் ஆகும். இந்த சித்த சுத்தியினால் நீ எந்த பலனும்! அடைவதில்லை. பலனாகவே நீ! இருப்பாய் என்பதே சத்தியம். இது எப்படி சாத்தியமாகும் என்றால் நீயே ஆத்ம! பலனாகவும் & பலமாகவும்! ஆவாய்.



29

ஆத்ம பலஹீனமும்! பலமாகவும்! உனக்கு சக்திய

பலன் = கிடைக்கும் நன்மை! பலம் = கிடைக்கும் சக்தி!

மாகும் போது, பலன்! **ஜீவன்முக்தி** யாக

இருக்க வேண்டும். அதற்குரிய நம்பிக்கையும் &

வைராக்கியமும்! உனக்கு பலமாக அமையும்

இதைவிடுத்து நாமரூப ஜகத ஜீவ மோஹம் வேண்டாம்.

காலத்தின்

13

(A) கற்பனை இல்லையானால் காட்சி இல்லை.


தோற்றம்

(B) தூல இல்லையானால் சொந்த பந்த பலம் இல்லை.

(C) அப்போதைக்கப் போது தோன்றும், அந்நாமம்!

அதாவது அறியாமை! அதாவது கவனக் குறைவு!


இல்லையானால் **யோகக் போகக் விஷ்ணு, மாயா!** இல்லவே இல்லை.



(A) நாமரூப! தோற்றமானது நிகழ்காலம்! சென்ற காலம்! வரும் காலம்! என்ற மூன்று நிலைகளில் தோன்றுகிறது. இதன் உட்பொருள் தோற்றம்! இருப்பு! மாற்றம்! மறைவு! என நான்காகும்.

காலமும்! நாமரூப தோற்றமும்! மனமய கற்பனையின் நிகழ்ச்சியே யன்றி வேறொன்றும் இல்லை. இதைத்தான் ஸ்ரீ மகான்கள் கூறும் போது நினைத்தால் பிறப்பு என்றும், மறந்தால் இறப்பு என்றும், சொன்னார்கள்.

இதை நன்கு உணர்கிறோம் என்றால் எதுவும் நிரந்தரம்! அல்ல என உணர வேண்டும். நிரந்தரமாயும்! சாஸ்வதமாயும்! சத்தியமாயும் உள்ளது மனமாகிய பரமும்! பரமாகிய மனமும்! பரமாகிய நாமமே என உணர்ந்தால் போதும். நாமரூப காலம் போம்.



31

ஜீவ தோற்றம் இல்லையானால் சொந்த பந்த பவம் இல்லை.
ஜீவம் என்றால் புண்ணிய பாப **வினை**யின் மொத்த உருவமாகும். இத்தோற்றம் உண்டாவதற்கு காரணம் **தோற்றத்தை** சொந்தம் கொண்டாடுவதும், அச் **சொந்தம்** பந்தமாக மாறுவதும், அப் **பந்தம்** பாசம் என்று பற்றாக மாறுவதும், அப் **பாசப்பற்றே** வினையே.
புண்ணிய பாபம் என்னும் ஜனனமரணமாகிய **பவ தொந்தம்**, ஆதிமாறுமாறா வந்து அலைக்கழிக்கிறதென்று உணர்ந்தால் போதும். இவை அனைத்தும் மனமாய விகார கற்பனையாகும். இவை அறிய வேண்டுமானால் எல்லாம் மண்ணே, மண்ணாகிய பரமே, பரமாகிய மண்ணே, பரமாகிய நாமே, என உணர்ந்தால் போதும்.



அப்போதைக்
கப்போது (32)
தோன்றும் அந்நாள்
என ஒன் சொல் கிறோ
என்றால்? அந்நாளைக்
எண்ணத்தால் தோன்
றுவது. எண்ணம் நாம
ரூபத்தில் தோன்றுவதும்
நாமரூபம் மாறும். மறையும்.
ஆகவே நாமரூபம் மண்ணுலவில் அங்கு அந்நா
ளைத் தோன்ற இடமே இல்லாமல் உறைவும்.

அப்போதைக்கப்போது தோன்றும் அந்நாளை
இல்லாமல் எந்தமாயாவுக்கும் இடம் இல்லை.

ஒன்றை (பரத்தை) மற்றொன்றாக காட்டுவது
யோகமாயா! ஆகும்.
அந்த மற்றொன்றை (பலபலவாக) பற்பலவாக!
காட்டுவது லோகமாயா! ஆகும்.
அப்பலபலவற்றை ரூபலாவண்யம் உ. மகிமை
பிரமாவும் எல்லாமென! எனக்
காட்டி மயக்குவது விஷ்ணுமாயா! மயங்குவது மனம்!
இவை அனைத்தையும் உணருங்கால் மாயாமனம்!
இரண்டும் இணைந்து சாக்ஷமப்படுவும்! கோட்ட
மடிப்பதுவும்! இருக்கிறதேயன்றி வேறொரு புண்ணியக்கமும்
இல்லை.



என் இருப்பிடமை விட்டுவிட்டுப் போகிறாயே என 33


மாயா அழுகிறது

என்றும் உன்னை முடியவில்லையே! நான் உன்னுடன் சாகிறேனே என மனம் அழுகிறதும்

இவையே மாயா & மனம்! அழும் நிலையாகும்.

இந்த மாயாவும்! மனமும்! கொட்டமடிப்பது எப்படி இருக்கிறதென்றால்? உனக்கு நான் மாரடிக்கிறேன்! எனக்கு நீ மாரடி!! இதன் பொருள் என்னவென்றால் நான் சாகும் போது நீ அழு! நீ சாகும் போது நான் அழுகிறேன் என்று மாயாவும் மனமும் ஜனன, மரணத்தை சுட்டிக்காட்டி இந்த அறியாமையின் ஜீவனை படாத பாடுபடுத்துகிறார்கள். அறியாமையை (ஜீவாத்மாவை) இந்த ஜீவன் சற்குருகிருபையால் விலக்கிவிட்டால் மாயாவுக்கும் வேலையில்லை! மனதுக்கும் இருப்பு இல்லை.

அதன் ஒரே மார்க்கம் அனைத்து எல்லா நாம ரூபமும் மண்ணே! மண்ணேகிய பரமே! பரமாகிய நாமமே! நாமமாகிய பரமே என உறுதி பண்ணு.






**14**

(A) நாமரூபத்தால் ஜனிக்காத ஒன்று எப்படி இருக்க முடியும்?


(B) அப்படி ஜனிக்காத ஒன்று எப்படி கெட்டுப் போக முடியும்?

(C) மண்ணில் பாண்டமில்லை, மண்ணில்லாமல் பாண்டம் இல்லை

**நாமரூபம்!** இல்லவே இல்லை! இருப்புதன்மை மட்டும் இருந்தால் அங்கு **நாமம்!** (பெயர்) ஒன்றுதான் உண்டு. ரூபம் என ஒன்று தோன்றினால் அங்கு இயக்கமும் அதன் குணமும் உண்டு. அப்படி இருப்புத்தன்மையோடு மட்டும் இருக்கும் **ஒன்றில்!** **மாயா!** இணைந்த பிணைந்த தன்மையால் இயக்கத்துக்கு ஒரு **பொருள்!** உண்டாயிற்று. அப்பொருளின் மாயா **மனம்!** கற்பனை பண்ணியதால் **குணம்!** சொரூபமான **நாமரூபம்!** கற்பனையால் உண்டாயிற்று.



இயக்க மாயாவும்! இயங்கும் மனமும்! இல்லை
இல்லையானால் நாமரூப ஜகஜீவ தோற்றங்கள்
இல்லை யென்பதே ஸத்தியம். ஆகவே இந்த நாம
ரூப ஜகஜீவ தோற்றங்களை எல்லாம் **மண்ணே** மெய்யாகவே
என உணர்ந்து விட்டால் நாமரூபம் உண்டாகவில்லை
என்பது ஸத்தியமே. அப்படி உண்டாகாத நாமரூபம்
கெட்டும் போனது எனச் சொல்லவிடமும் இல்லை.
ஆகவே தான் அநுபவ ஞானிகள் சொல் வருவது;
**மனம்** படைத்த அறியாமையின் மானிடர்
நாமரூப ஜகஜீவ அநித்ய தோற்றங்களும் உண்டு
உண்டு! என நம்பி மிகுந்து நின்றனர். ஐயோமாயம்?
மண்ணாகிய பாத்திரத்தை! பரமாகிய மண்ணை! உண்டு என
நம்பிநம்பி மாறு நின்றனர் மக்கள். பரமாகிய மண்ணே
நாம்! மண்ணாகிய பாத்திரமே நாம்! என உணர்ந்தால் போதும்.




15

Ⓐ எந்த நாம ரூப பொருளாவது இருக்கிறது என்றால்? இது இப்படி! இங்கு! இவ்விதமாய்! இருக்கிறது என சொல்லலாம்.

Ⓑ ஆனால் **ஸ்ரீபரமே!** பரமாகவே மணியே! சர்வ வியாபகமாய் இருக்கிறது.

Ⓒ ஆகவே அரூபமேனும் அந்த **ஒன்றுக்கு!** அழிவாத எதுவும் இல்லவே இல்லையென அறிவால் உணர்ந்து அம்மா அகமாக இரு.

குறிப்பாக இதை நிதானமாக உணர்ந்தால் விநாயகமே பொன்னோ! பொருளோ! உறவோ! சுற்றமோ! நட்போ! வேறு எந்த நாம ரூப பொருளாவது இது! இங்கு! **இப்படித்தான்!** இருக்கிறது என்றோ? இப்படித்தான் நடந்தது என்றோ? இங்கு இதை கண்டேன் என்றோ? இன்னாருக்கு இதை கொடுத்தேன் என்றோ? இங்கு இதை பார்த்தேன் என்றோ? இப்படி மயங்கிவிடாதீர்



**உறுதி!** சொல்ல முடிகிறதா? எனப் பார்த்தால் உறுதி சொல்ல முடியவில்லை!


தோற்றம்! இருப்பு! மாற்றம்! மறைவு!

**விடைக்கு விடை!** மாறுகிறதும் மறைகிறதும் சாஸ்வத இருப்பு இல்லவே இல்லை. இது நம் **மனதின்!** விளையாட்டேயன்றி வேறொன்றும் இல்லை.

இம் மாற்றத்தால் ஏமாற்றம்! இந்த ஏமாற்றத்தால் தடுமாற்றம்! தடுமாற்றத்தால்

**குணம்!** பின்னலிட்டு பின்னி மயக்கமும் அதனால் ஜனனமரணமும் உண்டாகிவிடுகிறது.

இது மாயாவும்! மாயாமனமும்! இணைந்து கொட்டம் அடித்து சாக்கடிக்கும் ஓர் விநோத நாடகம் ஆகும்.



ஸ்ரீபர! சொரூபத்தில் தோன்றி,

" சொரூபத்தை வைத்தே விளையாடி,

" சொரூபத்திலேயே மயமாகி,

மண்ணில் தோன்றிய மண்பாண்டம் அம்மண்ணி
லேயே விளையாடி அம்மண்ணிலேயே மறைவது போல்

ஸ்ரீபர! மாகவே ஆகிவிடுகிறதென
உணர்ந்தால் போதும்.

ஆனால் நாமரூபத்தால் குழம்புவது மாயா!

" குழம்புவது மனம்!

என ஸத்தியமாகவே உணர்ந்தால் போதும்.

எல்லாம் மண்ணே! மண்ணாகிய பரமே!!

பரமாகிய நாமே!!! என ஸத்தியமாக உணர்க.



# பிரமை:- 39

மனமயக்க நாம ரூப குண பேதம்

# பிரேமை:-

இறை! குரு! பர! உணர்வோடு ஒன்றுதல்.

16

இல்லையெனச் சொல்லும் பொருளும் இல்லை.

உண்டு " " " ".

வாக்கால் சொல்லும் சொல்லும் பொருளும் ".

அதாவது நாமமும் அதன் தோற்றமும் ".

இந்த உறுதி நிச்சயத்தில் **கருங்கல் ஆப்போ!** அசைவற்று! ஆசையற்று! சும்மாவே சுகமாக இரு!

இல்லை என்பதும் இல்லை. உண்டு என்பதும் இல்லை.

இதில் ஓர் உண்மையை உணர வேண்டும்.

கல்லில் நாயும்! மரத்தில் யானையும்! வடிக்கப்பட்ட ஒன்றாகும். ஆகவே அதில் ஒன்று தோன்றினால் ஒன்று தோன்றாது. ஆனால் பட்ட கட்டையில் தோன்றும் பேயோ! கள்வனோ! அக்கட்டையில் வடிக்கப்படாமலே இயல்பாகவே ஆனால் **மனப்பிரமையால்** தோன்றுவதாகும். ஆகவே இதோ



மண்ணுக (40) உண்டு.

நாம ரூப

பாத்திர பாண்டங்களாக அப்படி நாம ரூபம் பெற்றால் இயக்கு இல்லை. குணமும் புண்ணிய பாப சம்பந்தம் விடும்.

மனப் பிரமை இருக்கும் வரையில் உண்டு!
” ” நீங்கி விட்டால் இல்லை!

அதேபோல் நாமரூப ஜக ஜீவ தோற்றத்தின் சம்சார பயம் மனம் மிரண்டு பயந்து நோக்கினால் அவஸ்யம் உண்டு!

மனம் மிரளாமல் பயமில்லாமல் ஸ்வாமி!

மண்ணே! மண்ணே! எல்லாம்! அதுமாயவும் மனமும் இணைந்து நடத்தும் ஓர் மாயா நாடகம் என உணர்ந்து விட்டால் அந்த உணர்வு எப்படி இருக்கும் என்றால் இல்லை! என்றால் நாம ரூப ஜக ஜீவ தோற்றம் இல்லை என்றும் உண்டு! என்றால் மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே! பரமாகிய நாமமே! உண்டு என்றும் தெளிந்த கருத்தில் போல் அசைவற்று ஆசையற்று இருப்பாயாக.



# ஸம்ஸாரம்:-

கடல் அலைபோல் (41)
சர்வ சதாவும்
அசைந்து அசைந்து!
இன்ப துன்பத்தில்
அலைக்கழித்து ஆழ்த்துவது.

(17)


ஜலத்தில் இணைந்து கலந்த **உப்பை** போல்
ஆதி அந்தமில்லாத அகண்டானந்த பிரம்மானந்த
சமுத்திரம் போல் **அகண்ட** ஏகரஸத்தில்
**ஐக்கிய!** ரஸத்தில் அகண்ட பரமாவஸ்தையால்
கலந்து கரைந்து விடுவாயாக.

சமுத்திர ஜலத்தில் இருக்கும் உப்பு இயல்பானது! அது
இயற்கையானதாகும். ஆனால்?
ஜலத்தில் கரைத்த சர்க்கரை! இயல்பானதல்ல. அது
செயற்கையானதாகும்.

இயற்கையின் இயல்பான உப்பானது ஜலத்தை
கெடுக்காது. ஆனால் செயற்கையின் சர்க்கரையானது
ஜலத்தை கெடுத்து விடும்.


அதேபோல்?

**நாமரூப!** பேதங்களை நீக்கி! **ஸ்வரூப**



42

ஒன்றே! என ஐக்கியப்படுத்துவது
இயற்கையான சமுத்திரமும் உப்பும் போன்றதாகும்.
ஆனால்?
நாமரூபகுண! பேதங்களை
இல்லை! யென நீக்கி களையாமல்
அனுபவ அத்வைத! ஞானம் அடையாமல்,
எல்லாம் ஒன்றே என்றும், எல்லாம் பிரம்மம் என்றும்,
நானே ஆத்மா என்றும், நானே பிரம்மம் என்றும்,
வாய்! ஞானமாக! போதனை ஞானமாக! இருந்தால்
அனுபவத்தில் கரைத்த சர்க்கரையைப் போல்
பயனற்றதென்று ஸ்ரீ மஹான்கள் வாயிலாக
இதனை என்ன உணர்கிறோம் என்றால்? அறிகிறோம்



நாமரூப இக ஜீவ தோற்றத்தை மனத்தை! உணர்ந்து குணா! பேதங்கள் இருந்து! எல்லாம் மண்ணே! பரமாகிய மண்ணே! மண்ணாகிய மரமே! பரமாகிய நாமமே! என ஐக்கியமாக உணர்ந்து கரைந்து மயமாகிவிட்டால் அதுவே அகண்ட ஏக (ஐக்கிய) ரஸமானதும் வாய் ஞானமும் வேண்டாம்

(18) தூல விருத்தி! சாட்சி விருத்தி! அகண்ட விருத்தி! இவ் தூல விருத்தியும் சாட்சி விருத்தியும் வேண்டாம். அகண்ட விருத்தி வேண்டும். அனுபவ!

(A) தூல விருத்தி — நாமரூப குண தோஷ சம்பந்தமான, நான்! எனது! விடாத தான சம்பந்தத்தால்! புண்ணியபாப! ஜனன மரணத்தை! கொடுப்பது தூல விருத்தி ஆகும்.

ஆத்ம ஸாந்தியும், ஜனாபாயும் இதழ் !



காணும் கண் (44) பேசியும்! கேட்டும்! கேட்கும் காது பேசியும்! கண்டும்! பேசாமலாய் கண்டும்! கேட்டும்! நாம ரூப ஜகஜீவ தோற்றங்களில் பாதிறைல் விண்தோஷம் உண்டாகாதும் தொடரும்


சாட்சிவிருத்தி:

(B) சர்வார்ப்பணத்தால் தாவவிருத்தி கெட்டு! ஸ்ரீபகவத் சொரூபத்தை ஏக! குணமாகிய ஸத்வ! குணத்தை பெறுவது சாட்சிவிருத்தியாகும். ஸத்வகுணமும் சாந்தி அமைதியாகி! அந்த ஸ்ரீபகவானும் நாமும்! நாமும் ஸ்ரீபகவானும்! ஒன்றே! என அதுவே நாம்! என ஆவது சாட்சிவிருத்தியை கொள்மகாமும்.

(C) அகண்டவிருத்தி:— ஸ்ரீஸத்குரு அருளும் பிரம்மார்ப்பணத்தால் ஏகு குணமும் கெட்டு குணத்த நிர்குண! நிலையில் எல்லாம் ஒன்றே என்ற ஸர்வ! சாட்சிநிலையை பேரறிவு! நிலையை பெறுவது அகண்டவிருத்தியாகும். இந்த அகண்டவிருத்தியே ஓர் ஞானியாகிய திருப்பாடும் இதனால் எல்லாம் மண்ணே! பரமாகிய மண்ணே! மண்ணாகிய பரமே! நாமாகிய பரமே! என ஆகுடியும்.

ஓ பாபா.

இருபத்து ஒன்றே! நடப்பது நடவமே! அபயமே! இது ஸத்தியம்.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!